முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை! மேயர் சே.முத்துத்துரை முன்னிலை! துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்புரை!

# காரைக்குடி மாநகர் தி.மு.க. சார்பில் - சாதனை விளக்கப் பொதுக் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – கே.சி.உதயகுமார் – கு.சுமித்ரா – பா.கணேசன் சிறப்புரை!

காரைக்குடி, மே.11-

சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி மாநகரில் "நாடு போற்றும் நான்காண்டு- தொடரட்டும் பல்லாண்டு" கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம், மாநகர் தி.மு.க. சார்பில் நடைபெறுகிறது.

நாளை (12.5.2025 - திங்கட்கிழமை) மாலை 5.00 மணியளவில், காரைக்குடி - ஐந்து விளக்கு அருகில் நடைபெறும் இப்பொதுக் கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமை வகிக்கிறார்.

மேயர் சே.முத்துத்துரை முன்னிலை வகிக்கிறார்.

துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்றுப் பேசுகிறார்.

அமைச்சர் - மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன், சூரியூர் கே.சி. உதயகுமார், கு.சுமித்ரா, பா.கணேசன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் அ.கணேசன், த.சேங்கைமாறன், ஜோன்ஸ் ரூசோ, சுப.துரைராஜ், அ.முகமது, பா. செந்தில் குமார், டாக்டர் குமரேசன்,

சன். சுப்பையா, தி.செந்தில்குமார், இரா.கோ.அரசு உதயம் ராசு லெட்சுமிராஜ் கணேஷ், பெரி.வயிரவன், சே.சொக்க லிங்கம், போஸ்.குணசேகரன், ஏ. சேவியர், குழ.ஜான் கென்னடி,

கரு.அசோகன், கே.எஸ். ரவி, தெய்வானை இளமாறன், ஆதி.கண்ணத்தாள்,

இராம.அன்பழகன், கதி.ராஜ்குமார், ஹேமலதா செந்தில், எம்.சசிவர்ணன், திவ்யா சக்தி,ஆர். ராஜபாண்டியன், மெ. பழனியப்பன், துரைநாகராஜ், காரை சுரேசு, எஸ்.மைக்கேல், கலா காசிநாதன், சுப.ஹரிதாஸ், மு.பிரசன்னா, இராம.சீனிவாசன், டி.முருகேசன், எம்.ரவி, எஸ்.ராமனாதன், பி.பாண்டிசெல்வம், ஜான் பீட்டர், சாய் சுரேஷ், சொ.கருப்பையா, எஸ்.பிரபாவதி, வெ.சுப்பிரமணியன், ருக்மா, சரவணன், ஆட்டோ எம். கிட்டு, பரணி கிட்டு அபி (எ) அப்ரஹாம் எஸ்.சேவியர், முகம்மது சேட், ஆர். பாண்டியராசன், சுப.சிதம்பரம், கே.பி.பிரபு, கண்டதேவி அசோக், என்.சேவுகன், பி.ஜெபத்துரை, எம். கிட்டு அழகர் உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

சொ.கண்ணன் நன்றி கூறுகிறார்.

# கவிப்பேரரசு வைரமுத்து தாயார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 11-

கவிப்பேரரசு வைரமுத்து தாயார் மறைவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் தாயார் திருமதி அங்கம்மாள் அவர்கள் மறைந்ததை அறிந்து வேதனையடைந்தேன்.**

**தமிழையும் அன்பையும் ஊட்டி வளர்த்த அன்னையை இழந்து தவிக்கும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வரவேற்புரை: தி.மு.தனியரசு எம்.சி.! திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# கழக அரசின் நாடு போற்றும் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## தலைமை : மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ! சென்னை அரங்கநாதன்– கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மே 11 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் 9.5.2025 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம் எம்.ஜி.ஆர்.சாலை சாத்தாங்காடு மீன் மார்கெட் பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு கழக ஆட்சியின் சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் 13வது வட்ட செயலாளர் தி.மு. தனியரசு, கேபிள் டிவி எம். ராஜா, சுசிலா ராஜா, டி.ஏ.ராஜ், கே.பிரபாவதி, கே.கார்த்திகேயன், அ.மதிவாணன், குறிஞ்சி எஸ். கணேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், இரா. குமரேசன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

த.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எம்.எல். சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, க.வீ.சதிஸ்குமார், ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், பி.எஸ். சைலஸ், ஓய்.ரஜினிநந்தி, டி.டி.எம்.பாபு, ஆர்.டில்லி, ப.சந்தானகிருஷ்னன், ம.ஜெயராமன், வி.பழணிவேல், அ.அப்துல் சலிம், ம.எத்திராஜ், எஸ்.முத்துராஜ், கே.ஜானகிராமன், எஸ்.விஜயலஷ்மி, ராஜன் சாமிநாதன், எம்.மனோகரன், சு.பிரசாத், டி.கே.பசுபதி, ஏ.சந்தர்ராஜ், த.கதிரவன், ஆர்.டி.மதன்குமார், எம்.எம்.செந்தில், எஸ்.ஏ.சீனிவாசன், எம்.கோமவள்ளி, கு.தமிழ்மணி, ஜே. தேவநேசன், வி.தியாக ராஜன், ரா.மோகனசுந்தரம், ஜி.நடராஜன், வே.இளங்கோவன், து.சிவரஞ்சனி, கே.டி.ஆர்.பாலமுருகன், என்.ஹரினி, து.மோனிஷா, ஜானிதேவா, ர.மாணிக்கம், டி.செள ந்தர்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்திற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

தலைமை கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன் சிறப்புரையாற்றினார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம், வீ.கண்ணதாசன், வீ.கவி கணேசன், ஜி.சந்திரபோஸ், ஆர்.பத்மநாபன், வை.ம.அருள்தாசன், ஏ.வி.ஆறுமுகம், எஸ். நந்தகோபால்,, மிசா பா. மதிவாணன், வி.ராமநாதன், மு.ராஜேந்திரன், டி.ராம கிருஷ்ணன், அறிவழகி பால கிருஷ்ணன், எம்.ஆனந்தன், இரா.முரு கேசன், சாந்தி பக்தன் , என்.பரந்தாமன், ஜெ.ஜெ ய்மதன், ஜி.துக்காராம், புழல் எம்.நாராயனன், ஜி.தயாளன், மீ.வே. கர்ணாகரன், ஜி.ராஜேந்திரன், சி.அற்புத ராஜ், ந.திரு சங்கு, இ.குமரவேல், யு. எஸ்.குறளரசன், அ.இந்துமதி, எம்.வஜ்ரவேல், வ.முத்துசாமி, ஆர்.டி.ரமேஷ்குமார், ஜி.தினகரன், கே. துர்காபாய், எம்.எஸ்.நாகலிங்கம், மு.சிவகுமார், பி.தமிழரசன், டி.சி.வி.ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன் , பானுமதி சந்தர் ,

மு.மாணிக்கவேலன், டி.சேகர், கே.பவுல், கே.பி. சொக்கலிங்கம், கே.கண்ணன், டி.கணேசன், எம். செல்வம், த.கரிகால சோழன், ஆர்.தினேஷ்குமார், எம்.சந்திரகுமார், எஸ்.ஆர். மலைராஜ், வி.வீரமுத்து, இ.வி.சரவணன், பொன். கோ.விஜயன் எஸ்.மகேந்திரன் முருகா எஸ்.ஆறுமுகம், ஜி.தினேஷ், எஸ்.கணேஷ், எம்.ராம்குமார், என்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஸ்டாலின், பா.செல்வராஜ், என்.விஜயரங்கம், எ.ஞானமூர்த்தி, எஸ்.ரீதர் உள்ளிட்ட மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கலந்து கெண்டனர்.

இறுதியாக கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாவட்டப் பிரதிநிதி ஆர்.ரஜினிபாபு நன்றி கூறினார்.

தூத்துக்குடி அரசு மாதிரிப் பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி நிறுவனங்களில்

# 41 வகையான நுழைவுத் தேர்வுகள் எழுத பயிற்சிகள் - வழிகாட்டுதல்கள்!

## மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் ஆய்வு செய்து வழங்கினார்!

தூத்துக்குடி, மே 11-

தூத்துக்குடி மாவட்டம் வல்லநாடு இன்பென்ட் ஜீசஸ் கல்லூரி வளாகக் கட்டிடத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், நேற்று (10.05.2025) செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பள்ளி மாண வர்களுடன் கலந்துரையாடி, பல்வேறு உயர் கல்வி வழிகாட்டுதல்களை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

அரசுப் பள்ளிகளின் கல்வித்தரத்தை உயர்த்த தரமான அடிப்படைக் கல்வி முதல், அரசுப்பள்ளி மாணவர்களை இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறச் செய்வது வரை, பள்ளிக் கல்வித்துறையின் ஒட்டுமொத்த மறுமலர்ச்சியினை ஒற்றை இலக்காகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லாமல் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தைப் போக்கவும், அரசுப் பள்ளி மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்வதை ஊக்கப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டதற் கிணங்க, அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு மாதிரிப் பள்ளி செயல்பட்டு வருகிறது.

அந்தவகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் அரசுப் பள்ளிகளில் பயிலும் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வல்லநாடு இன்பென்ட் ஜீசஸ் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு மாதிரிப் பள்ளிகளில் உண்டு உறைவிட வசதியுடன் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டு, 2023 2024ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடி அரசு மாதரிப் பள்ளி மாணவர்களுக்கு நாட்டின் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் அதாவது, JEE, IIT, NIT, NEET மட்டுமல்லாது NIFT, CUET, CLAT என 41 வகையான நுழைவுத் தேர்வுகள் எழுதுவதற்கு தேவையான பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்பட்டதன் விளைவாக கிட்டதட்ட 26 மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு எழுதி தேர்வாகிவுள்ளனர். இன்னும் கிட்டதட்ட 40 மாணவர்கள் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் நுழைவுத் தேர்வு எழுதி வருகின்றனர்.

மேலும், அரசு மாதிரிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பையும், சிறந்த கல்வி நிறுவனங்களில் தொழில்முறை கல்வி பிரிவுகளில் சேர்ந்து பயிலும் வாய்ப்பினை உறுதி செய்தலும், சிறப்பு கற்றல் அமைப்பு மூலம் மாணவர்களின் ஒட்டுமொத்த ஆளுமைகளை மெருகேற்றி இணை கல்விச் செயல்களை மேம்படுத்துதலும், ஒவ்வொரு மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் திறன், மனோதத்துவ அடிப்படையில் தொழில் வாய்ப்புகளை மேற்கொள்ள தொழில் வழிகாட்டுதலும் இப்பள்ளியின் முக்கிய நோக்கமாகும்.

அரசு மாதிரிப் பள்ளியில் ஒரு வகுப்பு நேரத்தை உயர் கல்வி வழிகாட்டுதல் வகுப்பாக நடத்தப்படுகிறது. இதில் தனித்திறன், கலைத்திறன் மேம்பாடு, முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான வழிமுறைகள் உள்ளிட்ட பல்வேறு உயர்கல்வி வழிகாட்டுதல் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. அதுமட்டும்மல்லாமல், அரசு மாதிரிப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களது ஆரம்ப கால பள்ளிகளுக்கு சென்று அங்கு பயிலும் மாணவர்களுக்கு நாட்டில் உள்ள முதன்மை உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான வழிமுறைகள், அதற்கு எப்படி எல்லாம் தங்களை தயார்படுத்திக்கொண்டு, அதற்கான நுழைவுத் தேர்வு எழுதுவது குறித்து பல்வேறு உயர் கல்வி வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறார்கள்.

இந்த மாதிரிப் பள்ளி உண்டு உறைவிடப்பள்ளி என்பதால் மாணவ, மாணவிகள் தங்கிப் படிக்கும் வகையில் அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளுடன் மாணவ, மாணவிகளுக்கு தனித்தனியாக விடுதியும் உள்ளது. மேலும், பள்ளி வளாகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், நூலகம், ஸ்மார்ட் வகுப்பறை, கணினி அறை, இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வகம், விடுதிக் கட்டிடம், சமையலறை மற்றும் சுகாதார வளாகம் உள்ளிட்ட வசதிகள் குறித்து செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசுப்பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவரும் இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் இடம்பெறச் செய்ய வேண்டுமென்ற நோக்கில் அரசின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் எடுத்துரைத்து, மாணவ, மாணவியர்கள் மற்றும் செய்தியாளர்களுடன் அமர்ந்து மதிய உணவு அருந்தினார்.

மேலும், JEE, IIT, NIT, CUET, CLAT உள்ளிட்ட பல்வேறு முதன்மை உயர்கல்வி நிறுவனங்கள் நடத்தும் நுழைவுத் தேர்வுகளில் தேர்வாகியுள்ள மாணவர்கள் அரசு மாதிரிப் பள்ளியின் கல்வித்தரம், உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட சிறப்பம்சங்கள் குறித்தும், ஆசிரியர்கள் மூலமாக வழங்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து எடுத்துரைத்தனர். அதுபோன்று, மாணவ, மாணவியர்களின் பெற்றோர்களும் மாதிரிப் பள்ளியில் தங்களது பிள்ளைகள் கல்வி கற்பதனால் உண்டாகும் நன்மைகள் குறித்து உருவக்கமாக எடுத்துரைத்து, அரசுப் பள்ளி மாணவர்களும் சமூகத்தில் ஒரு உயர்ந்த இடத்திற்கு செல்ல முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் கல்வித்துறையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்திவரும் தமிழ்நாடு அரசிற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கணேஷ்மூர்த்தி, அரசு மாதிரப் பள்ளி தலைமையாசிரியர் கஜேந்திர பாபு, அசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாநில சுயாட்சி நாயகர் – முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு விழா!

# மும்பை தி.மு.க. சார்பில் - பாவேந்தர் பிறந்த நாள் விழா!

## பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமை! சு.குமணராசன் சிறப்புரை!

மும்பை, மே. 11-

மும்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், திராவிட கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் 134வது பிறந்தநாள் விழா மற்றும் அவரது பிறந்த நாளை உலகத் தமிழ் வாரமாக அறிவித்த மாநில சுயாட்சி நாயகர், நமது உரிமையினை மாநிலங்களுக்கு உச்ச நீதிமன்றத்தின் மூலம் போராடிப் பெற்றுத் தந்த கழகத் தலைவருக்கு நன்றி பாராட்டும் விழா, இன்று (11.05.2025 ஞாயிறு) இரவு 7 மணிக்கு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் நடைபெறுகிறது.

பொறுப்புக்குழு உறுப்பினர். ம.நீதிதுரை வரவேற்புரையாற்ற பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு. மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, மாறன் ஆரிய சங்காரன், ம.உத்தமன், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

பாவேந்தர் பாரதிதாசனார் படத்தை பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைக்கிறார்

மும்பை இலெமுரியா அறக்கட்டளை நிறுவுனர், தலைவர் சு.குமணராசன் சிறப்புரையாற்றுகிறார்.

மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்புச் செயலாளர் சாலமோன் ராசா, மும்பை பகுத்தறிவாளர் கழகம் தலைவர் அ.ரவிச்சந்திரன் மற்றும் ஜான் சாமுவேல், இரா.பழனிசாமி, ஆ.பால சுப்பிரமணியன், என். வி.சண்முகராசன், எஸ்.அரிராம்சேட், இரா.மதியழகன், களந்தை சண்முகவேலு, எஸ்.பி.செழியன், மா.கருண், கே.ஏ.ஜாகீர் உசைன், கி. தனுஸ்கோடி, இரா.காந்தி, அப்துல் திவான் மைதீன், வே.ரவிச்சந்திரன், சேரை ச.பிரகாஸ், சேலம் மா.சீனிவாசன், பி.இராமையா, எம்.ராஜன் (Rdo), தே. ஸ்டீபன், சுப.காளிமுத்து, ச.பெரியார் பாலா,அ.கண்ணன், சங்கர் திராவிட், தே.பொற்செழியன் எம். ராஜேந்திரன், க.வரத ராஜன், பொன்.சுப்பிரமணியன், ப.மாரிமுத்து, பொய்சர் க.மூர்த்தி, குப்பன், பி.எஸ்.அழகுராஜா ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

தாராவி தி.மு.க. பிரமுகர் ஆர்.ரவிரஜினி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் கழகத்தினரும் தமிழார்வலர்களும் பெருமளவில் பங்கேற்றுச் சிறப்பித்திடுமாறு மும்பை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு கேட்டுக்கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொன்பேத்தி இரா.சுந்தரராஜன்
### மே 11 (2015)



**புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் ஒன்றியம், பொன்பேத்தியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**ஆவுடையார்கோவில் ஒன்றியப் பெருந்தலைவராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டதுடன், நெருக்கடி மிசாவில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. கந்தப்பன்
### மே 11 (1990)



**கழக கொள்கை விளக்க அணிச் செயலாளராகவும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றியபோதுதான் கிராமங்கள்தோறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன.**

**1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரில் பங்கேற்று சிறை சென்றார். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**"ஆழ்ந்த அரசியல் ஞானமும், அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும், கழகம் காப்பதில் கடமை உணர்வும் என்னை "அண்ணே" என்று அழைக்கும்போது ஒரு வற்றாத பாசமும் – கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்" என தலைவர் கலைஞர் குறிப்பிட்டு போற்றியுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**